# நிதித்துறை

## மானியக் கோரிக்கை எண். 50

# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2023 - 2024


## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

# கோரிக்கை எண்.50

# ஓய்வூதியங்களும்
# ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

மாநிலத்தில் பணிபுரியும் பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்) மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என இரு வகையான திட்டங்களின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள். 01–04–2003–ஆம் நாளுக்கு முன்னர் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெறுகிறார்கள். 01–04–2003–ஆம் நாள் அன்று அல்லது அதற்கு பின்னர் பணியில் சேர்ந்தவர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகிறார்கள். வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 7,07,424 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் முறையே, ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 31.03.2023–அன்றுள்ளவாறு 6,28,971 பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரிகிறார்கள்.

## I. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

1. முன்னுரை:–

01.04.2003–ஆம் நாள் அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றனர். மேலும் 31.03.2023 வரை பணியிலிருந்து ஓய்வுப்பெற்ற/ பணிதுறப்பு / இறந்த/ பணிநீக்கம் செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட சந்தாதாரர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதி தொகை கோரி 29,598 விண்ணப்பங்கள் கருவூல கணக்கு ஆணையரகத்தால் பெறப்பட்டுள்ளது. அதில் 28,981 பணியாளர்களுக்கு இறுதி தீர்வாணை வழங்கப்பட்டுள்ளது. அதில் 2022–2023–ஆம் ஆண்டில் மட்டும் ஓய்வுபெற்ற 5,820 பணியாளர்களுக்கு இறுதி தீர்வுத் தொகையாக 327.74 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

(i) ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 01.06.1988 முதல் ஒன்றிய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு பணியாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியமானது, அப்பணியாளர்கள் வகிக்கும் பதவிக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. அதிகரித்து வந்த சம்பளம் மற்றும்

ஓய்வூதிய செலவினங்கள், அரசின் நிதி ஆதாரங்களால் ஈடுகட்ட முடியாத அளவிற்கு அதிகரித்து வந்தன. இதனால், கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற, போதிய நிதியில்லா நிலை ஏற்பட்டது.

(ii) ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு.பி.கே.பட்டாச்சார்யா, அவர்களின் தலைமையில் ஒன்றிய அரசு 26-06-2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடன், பணியாளர்கள், வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதிய திட்டத்தை பிப்ரவரி 2002-இல் பரிந்துரைத்தது. புதிதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன் கூடிய திட்டத்தை வடிவமைப்பது ஒன்றிய அரசின் நோக்கமானது, மாநில அரசுப் பணியாளர்கள், நடுத்தரவர்க்கத்தினை சார்ந்த சுயதொழில் புரிபவர்கள் மற்றும் அமைப்பு சாராத் துறைகளில், குறைந்த வருமானம் உள்ளவர்கள் போன்ற பிற குழுக்களுக்கு கால ஓட்டத்தில்

சேவை செய்யும் நோக்கத்தில் உருவாக்கப்படுகின்ற கட்டமைப்பாகும்.

(iii) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான ஒன்றிய அரசின் முன்முயற்சியைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் 2002–2003–ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

*"நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், **தமிழ்நாடு** அரசு தான் மிக அதிக அளவிலான ஓய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செலவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டு வரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme) போன்றதொரு புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது."*

(iv) வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, 01–04–2003–ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்த

பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 பொருந்தாது என்று உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

## 2. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான வழிமுறைகள்

(i) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினைச் செலுத்துகிறது.

(ii) 31.03.2023 அன்றுள்ளவாறு இத்திட்டத்தின் கீழ், உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள் உட்பட 6,28,971 பணியாளர்கள் உள்ளனர். மேலும் 31.03.2023 அன்றுள்ளவாறு, பணியாளர்களின் பங்களிப்பு, அரசு பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் 61,251.16 கோடி ரூபாய் ஆகும். இத்தொகையானது தற்போது இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் (LIC) முதலீடு செய்யப்பட்டுள்ளது.

3. வட்டி

தற்போது பொது வருங்கால வைப்புநிதி கணக்குகளுக்குப் பொருந்தும் காலாண்டுக்கான வட்டி விகிதத்திலேயே பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த தொகைக்கான வட்டி அனுமதிக்கப்படுகிறது. பொது வருங்கால வைப்பு நிதிக்கு 01-01-2023 முதல் 31-03-2023 வரையுள்ள கால அளவிற்கு 7.1 சதவீதம் வட்டி அனுமதிக்கப்படுகிறது. தேசிய ஓய்வூதியத் திட்டக் கட்டமைப்பில் இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் பல்வேறு ஓய்வூதிய நிதி மேலாண்மை கணக்குகளின் கீழ் பெறப்படுகின்ற வருமானத்தைக் காட்டிலும் இந்த வட்டி விகிதம் குறைவாகவே வருமானம் ஈட்டுகிறது.

4. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த தொகையிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகள்

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்ந்த மொத்த தொகையும், ஆயுள் காப்பீட்டு நிறுவன ஓய்வூதிய நிதியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம்முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையானது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கப்படும் பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை விடக் குறைவாக உள்ளது. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின்

தணிக்கை மறுப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இதனால் அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதுடன், தேசிய ஓய்வூதியத் திட்ட கட்டமைப்பின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருப்பின், பணியாளர்கள் அதிக பயன்களைப் பெற்றிருக்க முடியும்.

5. ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட இறுதிதீர்வு

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கென விதிகள் உருவாக்கப்படாத நிலையில், பணியாளர் மற்றும் அரசு பங்களிப்பு உள்ளிட்ட திரட்டப்பட்ட தொகையை வட்டியுடன் சேர்த்து ஒட்டுமொத்த தொகையாக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 31.03.2023 அன்றுள்ளவாறு, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாற்றி, பணி ஓய்வு / பணித்துறப்பு / இறந்த / பணிநீக்கம் செய்யப்பட்ட 28,981 பணியாளர்களுக்கு இறுதித் தீர்வு தொகையாக 1,919.19 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் 2003–ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ள நிலையில், திரட்டப்பட்ட தொகையானது வருடாந்திர திட்டத்தை உருவாக்குவதற்கு முறையான கட்டமைப்பு இல்லாத காரணத்தால், அரசு பணியாளர்கள் நிதியிழப்பை சந்திப்பதுடன் அதிக பாதுகாப்பின்மைக்கும் ஆளாகின்றனர். எனவே, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் திரட்டப்பட்ட நிலுவைகளை, ஓய்வூதிய

நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் முதலீடு செய்வது குறித்த உறுதியான முடிவு உடனடியாகத் தேவைப்படுகிறது.

**6. உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக் கணக்குத்துறைது ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கென மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, இது தொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**7. தமிழ்நாட்டில் உள்ள அகில இந்தியப்பணி (AIS) அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதிய திட்டம் (NPS)**

தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த அகில இந்தியப்பணி (AIS) அலுவலர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமான தேசிய ஓய்வூதிய திட்டத்திற்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம் (National Securities Depository Limited), ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதிமேலாளர் மற்றும்

வருடாந்திர சேவை வழங்குவோராகவும் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு அரசால் 28-06-2017 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. 31-03-2023 வரை அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையாக 45.26 கோடி ரூபாய் தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனத்திற்கு (NSDL) மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 8. தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கட்டமைப்பு

தேசிய ஓய்வூதியத் திட்டமானது தனது சந்தாதாரர்கள் ஓய்வூதியத்திற்காக சேமிக்க ஏதுவாக பின்வரும் முக்கிய அம்சங்களை வழங்குகிறது.

(i) தேசிய ஓய்வூதிய திட்டமானது 01-01-2004 முதல் புதிய ஓய்வூதியத் திட்டமாக செயல்பட்டு வருகிறது. இது 01-01-2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ ஒன்றிய அரசு பணியில் புதியதாக பணியமர்த்தப்படும் பாதுகாப்பு படையினரை தவிர மற்ற அனைவருக்கும் பொருந்தும். 01-05-2009 முதல் அனைத்து குடிமக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால் இத்திட்டம் தேசிய ஓய்வூதியத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

(ii) தேசிய ஓய்வூதியத் திட்டமானது வரையறுக்கப்பட்ட பங்களிப்பு அடிப்படையில் அடுக்கு-I மற்றும் அடுக்கு-II என இரண்டு அடுக்குகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

(iii) அடுக்கு-I-இன் கீழான ஓய்வூதியக் கணக்கானது 01.01.2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ அரசு பணியில்

பணியமர்த்தப்படும் அனைத்து பணியாளர்களுக்கும் கட்டாயமானதாகும். அடுக்கு–I–இல் பணியாளர்களின் சம்பளப் பட்டியலில் இருந்து ஒவ்வொரு மாதமும் பங்களிப்பாக அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்டது. அடுக்கு–I ஆனது ஆரம்ப கட்டத்தில் திரும்ப பெற இயலாத கணக்காகவும், தற்போது பகுதி அளவாக திரும்பப் பெறும் கணக்காகவும் மாறியுள்ளது.

(iv) அடுக்கு–II கணக்கானது பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்கிற்கு நிகரான ஒரு தன்னார்வ சேமிப்புக் கணக்காக 01–12–2009 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. செயல்பாட்டில் உள்ள அடுக்கு–I கணக்கானது அடுக்கு–II கணக்கைத் துவங்குவதற்கான முன்நிபந்தனையாகும். அடுக்கு–II–க்கான பங்களிப்புகள் சந்தாதாரர்களின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் திரும்ப பெறக்கூடிய ஒரு தனி கணக்காக வைக்கப்பட்டுள்ளது.

(v) 01–01–2004–ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒன்றிய அரசுப் பணியில் சேரும் புதிய அரசுப் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி ஆகியவை பொருந்தாது.

(vi) பணம் பெற்று வழங்கும் அலுவலர் / சம்பளக் கணக்கு அலுவலர் (கருவூல அலுவலர்) அல்லது NPS வலைதளம் அல்லது Points of Presence (POP) மூலம் ஒரு தேசிய ஓய்வூதியத் திட்டக் கணக்கை சந்தாதாரர் தொடங்கி நிரந்தர ஓய்வூதியக் கணக்கு எண்ணை (PRAN) பெறலாம்.

(vii) முதலீடு மற்றும் ஓய்வூதிய நிதியினை சந்தாதாரர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்யலாம்;

(viii) சந்தாதாரர்கள் தங்கள் இருப்பிடம், வேலை அல்லது ஓய்வூதிய நிதி மேலாளரை மாற்றினாலும், நாட்டின் எந்தவொரு பகுதியிலிருந்தும் தங்களின் கணக்கை எளிதாக இயக்கி கையாள இது வழிவகை செய்கிறது.

(ix) சந்தாதாரர்கள் 60 வயது அல்லது அதற்குப் பிறகு அடுக்கு–I–க்கான கணக்குத் திட்டத்தில் இருந்து வெளியேற முடியும். இத்திட்டத்திலிருந்து வெளியேறும் பணியாளர்கள் அவர்களது ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில் 40% ஒழுங்குமுறை நிறுவனத்தால் (IRDA) அங்கீகரிக்கப்பட்ட ஒரு காப்பீட்டு நிறுவனத்தில் வருடாந்திர பயன்பெறும் வகையில் முதலீடு செய்வது கட்டாயமாகும். இது பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு வாழ்நாள் ஓய்வூதியத்தை வழங்கும். சந்தாதாரர்கள் 60 வயதை எய்துவதற்கு முன் திட்டத்தை விட்டு வெளியேறினால், வருடாந்திர ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில், 80% ஓய்வூதிய பலன் பெறும் வகையில் காப்பீட்டு நிறுவனத்தில் கட்டாயமாக முதலீடாக வைக்கப்படும்.

(x) வெளிப்படையான முதலீட்டு விதிமுறைகள் மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்ட அறக்கட்டளையின் நிதி மேலாளர்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் செயல்திறனுடன் தேசிய ஓய்வூதியத் திட்டமானது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

(xi) ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA), ஓய்வூதிய முதலீட்டு சந்தையை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துகிறது.

மத்திய குடிமைப் பணி (ஓய்வூதியம்) விதி, 1972–இன் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் "பணிக்கொடை மற்றும் இறப்புப் பணிக்கொடை" தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கும் அதே விதிகள் மற்றும் வரையறைகளுக்குப்பட்டு பொருந்தும் என்ற ஆணை 2016–ஆம் ஆண்டு, ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

**9. வல்லுநர் குழு அமைத்தல்**

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தை தொடர பல்வேறு அரசுபணியாளர்கள் / சங்கங்களின் கோரிக்கையை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, பொருத்தமான முடிவினை மேற்கொள்ள அரசிற்கு பரிந்துரைக்க ஏதுவாக 2016–ஆம் ஆண்டில் ஒரு வல்லுநர்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையானது 27–11–2018 அன்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## 10. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கை குறிப்புகள்

31.03.2018–ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில் குறைவான நிதி முதலீடு மற்றும் கருவூலப்பட்டி முதலீட்டிற்கு பெறப்பட்ட குறைவான வட்டி காரணமாக 2015–2018 காலகட்டத்தில் மாநில அரசிற்கு 797.12 **ரூபாய்** கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டது என கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தேசிய ஓய்வூதிய திட்டத்தின் (NPS) கட்டமைப்பு உருவாக்கப்பட்டதும், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) தேசிய ஓய்வூதிய திட்டத்தில் சேருமாறு தொடர்ந்து தமிழ்நாடு அரசிடம் கோரியது (2008 மற்றும் 2009). தமிழ்நாடு அரசு தேசிய ஓய்வூதிய திட்ட கட்டமைப்பில் (NPS) சேர தவறியது (2010).

அரசாங்கம் எதிர்மறை வட்டி சுமையின் காரணமாக தற்போது ஆண்டுக்கு ரூ.1,200 கோடிக்கும் அதிகமான கூடுதல் நிதிச் செலவையும் எதிர்கொள்கிறது. மேலும், வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (DCPS) தொடங்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்தும் மாநில அரசு நிதி மேலாளரை நியமிக்கவில்லை என்பதும்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கை குறிப்புகள் உட்பட அனைத்து பரிமாணங்களையும் காரணியாகக் கொண்டு பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களின் பயன்கருதி விரைவில் முடிவெடுக்க வேண்டும்.

**<u>II. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்</u>**

வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு 1971–ஆம் ஆண்டு தோற்றுவித்தது. அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975–ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) ஏற்படுத்தப்பட்டது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் கீழ்க்காணும் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1) அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்.
2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்.

3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (GPF).

4) சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ஊக்க தொகை செலுத்துதல் (Direct Benefit Transfer).

அரசாணை (நிலை) எண் 201, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 21.05.2009-இன் படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.


அரசாணை (நிலை) எண் 463, நிதித் (ஓய்வூதிய குறை தீர்க்கும்) துறை, நாள் 27.12.2013-இன் படி அரசு பணியாளர்களுக்கு புதிய பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்கு எண் ஒதுக்கீடு செய்தல் மற்றும் பராமரிக்கும் பணிகள் அனைத்தும் மாநில கணக்காயர் அலுவலகத்திலிருந்து அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. மாற்றம் செய்த பின்னர் காலமுறை ஊதியம்

பெறும் அனைத்து அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் நிலையாக்கப்படாத பணியாளர்கள் ஆகியோர்களுக்கு இவ்வலுவலகத்தில் புதிய கணக்கு எண் ஒதுக்குதல் மற்றும் கணக்குகளைப் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் பணியாளர்களுக்கு வழங்கியுள்ள குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வகை | 31.03.2023 **அன்றுள்ளவாறு வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள்** |
|---|---|---|
| 1 | அரசுப் பணியாளர்கள் | 4,92,952 |
| 2 | நிதி உதவி பெறும் பள்ளிகள்/ கல்லூரிகள் | 49,833 |
| 3 | ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் | 51,845 |
| 4 | நகராட்சி பள்ளிகள் | 3,183 |
| 5 | உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் | 31,158 |
| | மொத்தம் | 6,28,971 |

## 31.03.2023 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கு எண்கள்




## இறுதி கணக்குத்தாள் வழங்குதல்

28,981 ஓய்வுபெற்ற / பணிதுறப்பு / இறந்த பணியாளர்களின் இறுதி கணக்குத்தாள்கள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பபட்டுள்ளது.


## உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 31,158 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். இணையதளம்

வழியாக, சந்தாபிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை பதிவு செய்யப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு இறுதிதீர்வு வழங்கப்பட்டுள்ளது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (GPF)**

அரசாணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19.04.2010–இல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகளின் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்தப் பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட திட்டத்தில் 31.03.2023 அன்றுள்ளபடி 2,12,211 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.




அரசாணை (நிலை) எண் 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20.07.2015–இல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடம் இருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. இப்பணியாளர்களின் கணக்கு தாள்கள் விவரம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.


**சத்துணவுத் திட்டம் (NMP) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணியாளர்களுக்கு தற்காலிக முன்பணம் / 90% பகுதி இறுதித் தொகை வழங்குதல்**

அரசு கடித எண் 9831, சமூக நலத்துறை/4-2/2020-3, நாள் 18-06-2021-இல் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணியாளர்களுக்கான தற்காலிக முன்பணம் பெற்றிட உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. சந்தாதாரர்கள் முதன் முறையாக தற்காலிக முன்பணம் பெறுவதற்கு 5 ஆண்டுகள் சந்தாதொகை செலுத்தியிருக்க வேண்டும். சந்தாதாரர் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறும் நாளுக்கு ஓராண்டு இருக்கும் பொழுது 90% பகுதி இறுதித் தொகையினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். மீதமுள்ள 10% தொகை அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்ட பிறகே சம்பளம் பெற்று வழங்கும் அலுவலரால் வழங்கப்படும்.

**இறுதி தொகை வழங்கும் பணிகள்**

31.03.2023 வரை இத்திட்டத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 19,127 பணியாளர்களுக்கு பொது வருங்கால வைப்புநிதி இறுதித்தொகை ரூ.73.60 கோடி அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணியாளர்களுக்கு இறுதித் தொகை வழங்கப்பட்ட விவரம்**





| | 2018-2019<br>1 | 2019-2020<br>2 | 2020-2021<br>3 | 2021-2022<br>4 | 2022-2023<br>5 |
|---|---|---|---|---|---|
| ■ சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்பளிப்பு | 905 | 2877 | 2438 | 2135 | 5481 |
| ■ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்பளிப்பு | 38 | 213 | 642 | 1384 | 3014 |


**சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ஊக்க தொகை வழங்குதல் (Direct Benefit Transfer)**

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை 2017–2018 ஆம் ஆண்டு கரும்பு அரவை பருவம் முதல் வழங்கும் பொருட்டு, நேரடி பயனாளி திட்டத்தினை (Direct Benefit Transfer Scheme) அரசு அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பயனாளியின் வங்கி கணக்கிற்கு நேரடியாக மின்னணு பரிவர்த்தனை திட்டம் வாயிலாக ஊக்கத் தொகை வரவு வைக்கப்படும்.

## உழவர்களின் எண்ணிக்கை




## விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்ட தொகை விவரங்கள்




அரசு தகவல் தொகுப்பு விவர மையம் இப்பணி சம்பந்தமாக பயனாளர்களின் விவரக் குறிப்புகளைத் தொகுக்கும் பணியினை 2018 முதல் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

### III. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்)

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்) 01-04-2003க்கு முன் நியமிக்கப்பட்ட அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கியது. 31.03.2023 அன்றுள்ளவாறு, இந்தத் திட்டத்தின் கீழ் 2,89,389 பணியாளர்கள் உள்ளனர். 2022-2023-ஆம் ஆண்டில் 22,261 பணியாளர்கள் ஓய்வு பெற்றதால் 4678.19 கோடி ரூபாய் ஓய்வூதியப் பலன்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இது தவிர 7,07,424 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் மேற்கூறிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். 2022-2023 ஆம் ஆண்டில், ஓய்வூதியதாரர்கள் இறப்பு காரணமாக ஏற்கனவே இருந்த 7,142 ஓய்வூதியதாரர்கள் குடும்ப ஓய்வூதியதாரர்களாக மாற்றப்பட்டு, இதற்காக 171.51 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண் 50-இன் கீழ், ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளுக்கான செலவினத்தை


மேற்கொள்ளும் பொருட்டு, 41,231.90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகளுக்கான செலவு விவரம் பின்வருமாறு:–**





- **2023–2024 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதிய செலவு அதிகரித்ததற்குக் காரணம், அரசு பணியாளர்களின் ஓய்வுபெறும் வயதானது 2020 ஆம் ஆண்டு 58 லிருந்து 59 ஆகவும், மற்றும் 2021 ஆம் ஆண்டு 59 லிருந்து 60 ஆகவும் உயர்த்தியதால் ஆகும்.**

**31.03.2023 அன்றுள்ளவாறு மாநில அரசு ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் பின்வருமாறு:–**



**31.03.2023 அன்றுள்ளவாறு குடும்ப ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் பின்வருமாறு:–**




**<u>ஓய்வூதியம் (Pension)</u>**

(அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதிப் பணிக்காலம் 10 நிறைவுற்ற ஆண்டுகளாகும் (**10** completed years). முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 30 நிறைவுற்ற ஆண்டுகளாகும். மேலும், அரசுப்பணியாளர்கள் ஓய்வு பெறும் போது, பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது


இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ஆ) 01–10–2017 அன்று முதல், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்**

80 வயது முடிந்த ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் அதாவது 81 வயது ஆரம்பிக்கும்போது கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர். 31–03–2023 அன்றுள்ளவாறு கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களின் மொத்த எண்ணிக்கை 89,005 ஆகும்.

**வயது வாரியாக கூடுதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் விவரங்கள்**



**அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்**

அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு, மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850/- **ரூபாய்** உட்பட ஏனைய ஓய்வுகாலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**வரையறுக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ்வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பயன்கள்**

ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதியும் மற்றும் ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

**வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity)**

**(அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)**

பத்து நிறைவுற்ற ஆண்டுகளுக்கு (10 completed years) குறைவாக தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. இது அவர்கள் ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்தத் தொகையாகும்.

**(ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும் போதே மரணமடையும் நேர்வில், 01-10-2017 முதல், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:-

| வ. எண் | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினொரு ஆண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |

| வ. எண் | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 4. | பதினொரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு |
| 5. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும். |

## (இ) <u>ஓய்வுகாலப் பணிக்கொடை (Retirement Gratuity)</u>

ஒரு அரசு பணியாளர், ஐந்து நிறைவுற்ற ஆண்டுகளும் (completed 5 years) அதற்கு மேலும் தகுதிப்பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும் போது ஓய்வுகாலப் பணிக்கொடை வழங்கப்படுகிறது. 01–04–1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 01–01–2016 முதல் இறப்பு பணிக்கொடை / ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Defined Benefit Pension Scheme)**

(அ) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு இறந்த அரசு பணியாளர் அல்லது ஓய்வு பெற்ற அரசு பணியாளரின் குடும்பத்திற்கு அவர் ஒரு வருடத்திற்கும் குறையாத காலத்திற்கு தொடர்ச்சியான தகுதிப் பணியினை நிறைவு செய்திருந்தால் அவர்தம் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

(ஆ) அரசாணை நிலை எண் 313, நிதித்(ஊதியக்குழு) துறை, நாள்.25.10.2017–ன் மூலமாக குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படும் பொழுது ஓய்வூதியதாரர் ஓய்வு பெறும் பொழுது பெற்ற ஊதியம் மற்றும் தர ஊதியத்தின் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் / ஊதிய ஏற்ற முறையில் தொடர்புடைய பரிந்துரைக்கப்பட்ட அலகில் குறைந்தபட்ச ஊதியத்தில் 30%–க்கும் குறைவாக இருக்கக்கூடாது.

(இ) 01–10–2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## கருணைத் தொகை (Ex–Gratia Payment)

பங்களிப்பு வருங்கால வைப்புநிதி / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 01–01–1986–க்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது பணியிலிருக்கும் போது இறந்து விட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன் 01–01–2023 முதல் 388 சதவீத அகவிலைப்படியும் சேர்த்து வழங்கப்படுகிறது.

## ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் $33^1/_3$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். இச்சலுகை, விருப்பத்தின் பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும், அகவிலைப்படி ஓய்வூதிய ஒப்படைப்பிற்கு முன்னர் உள்ள தகுதியான முழு ஓய்வூதிய தொகைக்கு வழங்கப்படுகிறது.

**அகவிலைப்படி**

ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தற்காலிக ஓய்வூதியம் / தற்காலிக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

**மருத்துவப்படி**

01–10–2017 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தற்காலிக ஓய்வூதியம் / தற்காலிக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாதம்தோறும் 300 ரூபாய் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**பொங்கல் பரிசு**

"C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad–hoc pensioners of all categories) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம்

அடைந்திருந்தாலும், ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

## பண்டிகை முன்பணம்

ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை முன்பணம் 02-08-2019 முதல் 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

## மின்னணு ஓய்வூதியம் (e-Pension)

ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளி விவரங்களை பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வுமுறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வுமுறை (Regional Electronic Clearing Service) மூலமாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன் மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக

பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன்பெற வழிவகுக்கும்.

**<u>ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணல் (e–Mustering) :</u>**

மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தங்களின் வாழ்நாள் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பிக்கின்றனர். தற்போது, ஓய்வூதியம் பெறுவோர் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் தங்களின் வசதிக்கேற்ப பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து தங்களின் வாழ்நாள் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (i) நேரடியாக வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல் (Direct Mustering) (ii) தபால் மூலம் வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல் மற்றும் (iii) பயோமெட்ரிக் சாதனத்தைப் பயன்படுத்தி, மின்னணு வாழ்நாள் சான்றிதழை (Digital Life Certificate) ஜீவன் பிரமான் இணைய முகப்பு வழியாக சமர்ப்பித்தல், கோவிட் நோய்த் தொற்றின் காரணமாக, ஓய்வூதியம் பெறுவோர்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன் பெறும் வகையில் 2021 மற்றும் 2022–ஆம் ஆண்டுகளில் வருடாந்திர நேர்காணல் (Annual Mustering) மற்றும் வாழ்நாள் சான்று சமர்ப்பித்தல்

(furnishing of Life Certificate) ஆகியவற்றிற்கு விலக்கு அளித்து ஆணையிடப்பட்டது.

தமிழ்நாடு அரசு 2022 ஆம் ஆண்டு முதல் வழக்கமான முறையில் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் வருடாந்திர நேர்காணலை (Annual Mustering) மேற்கொள்ளவும், ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் நேர்காணலுக்கு (Annual Mustering) நேரில் வருவதைத் தவிர்க்கவும், 80 சதவீதத்திற்கு குறையாமல் வருடாந்திர நேர்காணல் ஜீவன் பிரமான் இணைய முகப்பு வழியாக, இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) மூலமாக இருப்பிடத்திற்கே சென்று சேவை, இ–சேவை மையங்கள் / பொது சேவை மையங்கள், ஜீவன் பிரமான் இணைய முகப்புடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் சாதனம் கொண்டுள்ள ஓய்வூதியர் சங்கங்கள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதற்கான திருத்திய ஆணைகள் வயதான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் துயரத்தினை தவிர்க்கும் பொருட்டும், நேர்காணலுக்கு நேரில் வருவதை தவிர்த்து ஊக்குவிக்கும் பொருட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் அவர்களின் வசதிக்கேற்ப பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. மின்னணு வாழ்நாள் சான்று (DLC), ஜீவன் பிரமான் இணைய முகப்பு வழியாக கீழ்காணும் வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளலாம்.

   அ) இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) (ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அவர்கள் இருக்கும் இடத்திலேயே இச்சேவையை பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது)

   ஆ) இ–சேவை மையங்கள் / பொது சேவை மையங்கள்.

   இ) ஜீவன் பிரமான் இணைய முகப்புடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் சாதனம் கொண்ட ஓய்வூதியர் சங்கங்கள்.

2) தபால் மூலம் வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பித்தல்.

3) நேரடியாக வருடாந்திர வாழ்நாள் சான்றிதழை சமர்பித்தல் (Direct Mustering).

மேற்கூறிய ஆணையின்படி 7,05,712 மொத்த ஓய்வூதியதாரர்களில் 6,09,613 ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு வாழ்வு சான்று வழியாக நேர்காணல் செய்யப்பட்டது. இதில் 1.41 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் இந்திய அஞ்சல் கட்டண வங்கி (IPPB) வழியாக அவர்களின் இருப்பிடத்திலேயே இச்சேவையைப் பெற்றுள்ளனர். இணைய வழியாக 80 சதவீதத்திற்கும் மேலான நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization)</u>**

சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கம் செய்திட முதல்கட்ட பணிகளுக்கு அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் இப்பணிகளுக்கான செலவுகளை மேற்கொள்ள அரசு 135 இலட்சம் ரூபாய் அளவிற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல்

அளித்துள்ளது. இரண்டாம் கட்டப்பணிக்காக தற்போது வரை 129.31 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியர் இணையம் (Pensioners Portal)**

2020-ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்கள் மேம்படுத்தப்பட்ட இணையத்தில் கிடைக்கப்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்கள் https://www.karuvoolam.tn.gov.in (IFHRMS) என்ற வலைதளத்தினை பார்வையிட்டு அவர்கள் பெறும் ஓய்வூதிய விவரங்களை நவம்பர் 2020 முதல் பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## IV. ஓய்வூதிய இயக்குநரகம்

அரசு 01-09-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித்துறை அரசு கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இவ்வியக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(அ) மாநில அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதியக் குறைகளைத் தீர்த்தல்.

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய குறைதீர்க்கும் மன்றத்தின் மூலம் தீர்த்தல்.

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997– ஐ நிர்வகித்தல் மற்றும் செயல்முறைப்படுத்தல்.

(ஊ) அமைப்புசாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

(எ) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 மற்றும் 2000 ஆகியவற்றின் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஏ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995–இன் கீழ் நிலுவையிலுள்ள நேர்வுகளைத் தீர்வு செய்தல்.

## தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்


i. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதி திட்டம் 01.01.1997 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர் ஒருமாத பங்களிப்புக்கு பின்னர் இறக்க நேரிட்டால் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர் அல்லது நியமனதாரருக்கு 50,000/– ரூபாய் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

ii. கோவிட் நோய் தொற்று காலங்களில் ஓய்வூதியதாரர்களின் இறப்பு எண்ணிக்கை அதிகமானதால், நிலுவை விண்ணப்பங்களை நேர் செய்ய அரசாணை (நிலை) எண் 125, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 09.05.2022–இல் ரூ.50 கோடியை அரசு கணக்கிலிருந்து ஐந்து ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் வட்டியில்லா கடனாக குடும்ப பாதுகாப்பு நிதி திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளது.


iii. மேலும், அரசாணை (நிலை) எண் 84, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 28.03.2023–இல் நிலுவையில் உள்ள கோரிக்கைகளைத் தீர்வு

செய்வதற்காக, தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டங்களுக்கு அரசுக் கணக்கில் இருந்து மீண்டும் முன்பணமாக ரூ.25 கோடியை அனுமதித்துள்ளது. மேற்கூறிய தொகையில் 5,000 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**2021 மற்றும் 2022–ஆம் ஆண்டுக்கான குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் தொடர்பான கோரிக்கைகள் குறித்த வயது வாரியான இறப்பு விகித பகுப்பாய்வு**




**<u>2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியதாரர்களின் பங்களிப்பு</u>**




**<u>குறிப்பு</u>** ஓய்வூதியதாரர்களின் மாத சந்தா தொகையானது ரூ.80/–லிருந்து ரூ.150/– ஆக 01.07.2021 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**<u>2018 முதல் 2023 வரை ஆண்டு வாரியான குடும்ப பாதுகாப்பு நிதி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் தீர்வுகள்</u>**




**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 1984</u>**

இத்திட்டம் 01–04–1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூபாய் 20 வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 10,000 சேர்த்து வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 2000

இப்புதிய திட்டம் 01–10–2000 முதல் தொடங்கப்பட்ட பின்னர் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப்பயன் அத்திட்டத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30–09–2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணியாளர்களுக்கும் விருப்பத்தின் பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு ரூபாய் 50 வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும் போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 01.04.2022 முதல் 31.03.2023 வரை 1,848 ஓய்வுப்பெற்ற பணியாளர்களுக்கு தீர்வு செய்யப்பட்டுள்ளது. 01–10–2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை ரூபாய் 70/– ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையான ரூபாய் 10,000/– சேர்த்து வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969**

இத்திட்டம் தமிழ்நாடு அரசுத் தொழில் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தின ஊதியப் பணியாளர்களின் நலன் கருதி 1969–ஆம் ஆண்டு அரசாணை எண்.1883, நிதித் (பல்வகை) துறை, நாள் 26.12.1969–இன் படி தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 01.04.1989–க்கு முன்னர் ஊதியத் தொகையில் 8.33 சதவீதத் தொகை பணியாளர் பங்காகவும், அதற்கு சமமாக அரசு நிறுவனப் பங்கு தொகையாகவும் நிதி பெறப்பட்டது. 01.04.1989–க்கு பின்னர் பணியாளரின் ஊதியத் தொகையில் 10 சதவீதத் தொகை பணியாளரின் பங்காகவும் அதற்கு சமமாக அரசு நிறுவனப் பங்காகவும் அரசிடமிருந்து பெறப்படுகிறது.

தற்போது வேளாண்மைத் துறை, வனத்துறை, பொதுப்பணித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் (எண்ணை வித்துக்கள்) துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட 9 அரசுத் துறை நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. 12,269 உறுப்பினர்கள் இதுவரையில்

இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்மந்தப்பட்ட அலுவலர்களால் சந்தாதாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சந்தா தொகை அரசு தன் வைப்புத் தொகைக் கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படுகின்றது.

ஓய்வூதிய இயக்ககத்தின் கணக்கு அலுவலருக்கு (நிதி) அதிகார பகிர்வு அளிக்கப்பட்டு அதன்படி சந்தாதாரர்களுக்கு இத்திட்டத்தின் இறுதித் தொகை தீர்வு செய்யப்பட்டு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டம் (IFHRMS) மூலம் வழங்கப்படுகிறது. 2021–2022 ஆம் நிதியாண்டு வரையிலான கணக்குத்தாள்கள் வழங்கப்பட்டுள்ளது. 90 பயனாளிகளுக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரையில் ரூ.95.97 இலட்சம் இறுதித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

<u>ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்.</u>

பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், ஓய்வூதிய இயக்கக மின்னஞ்சல் மூலம் பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக பெறப்படும்

மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, உடனடியாக தீர்வு காணப்படுகிறது.

**<u>மாவட்டங்களில் நடைபெறும் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டம்</u>**

மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை நடத்துகிறார்கள். ஓய்வூதிய இயக்குநர் அல்லது இணை இயக்குநர் இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டு, மாவட்டங்களிலிருந்து பெறப்படும் குறை தீர்க்கும் மனுக்களின் மீது விரைவாகத் தீர்வு காண்பதற்கு உதவுகிறார்கள். மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள ஓய்வூதிய முன்மொழிவுகளுக்கான, தீர்வுகளை விரைவுபடுத்த இந்த இயக்குநரகத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டங்களிலிருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்கள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்குத் தீர்வு காண அனுப்பப்பட்டு, துறை வாரியாகக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு, இத்தகைய மனுக்களுக்கு தீர்வு காண்பதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

01.04.2022 முதல் 31.03.2023 வரை 54 ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் கூட்டம் பல்வேறு மாவட்டங்களில்

நடைபெற்றது. புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் தீர்வு செய்யப்படாத மருத்துவச் செலவுகள், அடையாள அட்டைகள் வழங்குதல், கூடுதல் ஓய்வூதியம் வழங்குதல், பகுதி ஓய்வூதியத்தொகை திரும்ப பெறுதல், கருணைத்தொகை வழங்குதல், ஓய்வூதியம் மறுசீரமைப்பு செய்தல், ஓய்வூதிய நிலுவைத் தொகையை வழங்குவதில் தாமதம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதில் உள்ள தாமதம் போன்ற ஓய்வூதியம் தொடர்பான கோரிக்கைகள் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்படுகிறது.

ஓய்வூதியதாரர்களின் பணி பலன்கள் தொடர்பாக, துறைத் தலைவர் / தலைமை அலுவலகங்களுக்கும் ஓய்வூதியதாரர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், இறுதி தீர்வு காண மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் ஓய்வூதிய இயக்குநரகத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலகட்டத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட 1,813 ஓய்வூதியதாரர்களின் குறைதீர் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. தற்போது மாவட்டங்களில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டத்தை ஆண்டுக்கு ஒருமுறை நடத்துவதற்கான திருத்திய வழிகாட்டுதல்களை வெளியிட்டு அரசு ஆணையிட்டுள்ளது.

**ஓய்வூதியதாரர்களின் கையேடு**

ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் அனுப்ப வழிகாட்டுதல்கள் ஆகிய தகவல்கள் அடங்கிய கையேடு www.tn.gov.in/dop என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின்னஞ்சல் முகவரி dop@tn.nic.in

**ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்**

ஓய்வூதிய இயக்ககத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1969 ஆகிய இரண்டு முக்கிய திட்டங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் பலன்தொகை தேசிய மின்னணு வாயிலான நிதி வழங்கல் (NEFT) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

**V. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2022**

(அ) ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014, **01–07–2014** முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 01–07–2022 முதல் 30–06–2026 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில கூடுதல் அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றை பெற உச்சவரம்பு 4 **இலட்சம்** ரூபாயிலிருந்து **5 இலட்சம்** ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இப்புதியத் திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன்/ திருமணமாகாத மகள் உழைக்கும் திறனற்ற மனநலம் குன்றிய அல்லது மனநலமற்றவராக அல்லது மாற்றுத் திறனாளியாக இருந்தால் அல்லது மணமாகாத/ விவாகரத்து பெற்ற/ விதவை மகளாக இருப்பின் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பலன்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) இப்புதிய திட்டத்தில் கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 10 **இலட்சம்** ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்.

2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக டயாலிசிஸ்.

3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை.

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்.

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysms) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasties)

6) தீக்காயங்களுக்கான சிகிச்சை

7) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக நன்கொடையாளரின் உறுப்பு பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் சிகிச்சைக்கான செலவுகள்

8) தீவிர சிகிச்சை பிரிவில் மேற்கொள்ளப்படும் கோவிட்–19 நோய் தொற்றிற்கான சிகிச்சை.

(ஈ) இதுவரை 6,12,060 ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற ஏதுவாக காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டத்தின் கீழ், மீதமுள்ள அடையாள அட்டைகள் பெறாத ஓய்வூதியதாரர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

(உ) இத்திட்டத்தின் கீழ் 01.07.2022 முதல் 31.03.2023 வரை 57,058 பயனாளிகள் 235.71 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஊ) மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அந்த நிறுவனங்களால் கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்கொள்ளாமல்

அந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அவர்கள் இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது.

இது தவிர தற்போது கோவிட் சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள **ரூ.2.50 கோடி** நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை **ரூ.52.50** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 6,864 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும், அவசரத்தன்மையற்ற நிலையில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் ஓய்வூதியதாரர்களால் மேற்கொள்ளப்பட்ட கோவிட் சிகிச்சைகளுக்கான மருத்துவ செலவினத்தை மீள வழங்க சிறப்பு தொகுப்பாக **ரூ.6 கோடி** ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் 581 ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்
துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.